[Public]

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
**ரூ. 240,000 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகளை வழங்கல்**

10.00%2030 ‘A’ தொடரின் கீழ் ரூ. 90,000 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள், 11.20%2033 ‘A’ தொடரின் கீழ் ரூ. 70,000 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள் மற்றும் 11.50%2035 ‘A’ தொடரின் கீழ் ரூ. 80,000 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள் 2026 மே 27 ஆம் திகதி இடம்பெறும் ஏலமொன்றின் மூலம் வழங்கப்படவுள்ளன.

திறைசேரி முறி வழங்கல்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் | **10.00%2030 ‘A’** | **11.20%2033 ‘A’** | **11.50%2035 ‘A’** |
|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKB00530H016 | LKB01533A154 | LKB02035C155 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 90,000 மில்லியன் | ரூ. 70,000 மில்லியன் | ரூ. 80,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | வருடமொன்றுக்கு 10.00% | வருடமொன்றுக்கு 11.20% | வருடமொன்றுக்கு 11.50% |
| வழங்கப்படும் திகதி | 01 ஆகஸ்ட் 2025 | 15 சனவரி 2018 | 15 மார்ச் 2015 |
| முதிர்வுத் திகதி | **01 ஆகஸ்ட் 2030** | **15 சனவரி 2033** | **15 மார்ச் 2035** |
| நறுக்கு கொடுப்பனவுத் திகதி | 01 பெப்ரவரி மற்றும் 01 ஆகஸ்ட் | 15 சனவரி மற்றும் 15 யூலை | 15 மார்ச் மற்றும் 15 செப்டம்பர் |
| ஒன்றுசேர்ந்த வட்டித் தொகை | ரூ. 100.00 இற்கு ரூ. 3.3149 | ரூ. 100.00 இற்கு ரூ. 4.2387 | ரூ. 100.00 இற்கு ரூ. 2.4375 |
| ஏல விற்பனைத் திகதி | 2026 மே 27, புதன்கிழமை | | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2026 மே 27, புதன்கிழமை 11.00 மு.ப. | | |
| தீர்ப்பனவுத் திகதி | **01 யூன் 2026** | | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்கள். | | |

திறைசேரி முறிகளில் முதனிலை வணிகர்களிடமிருந்து உன்மை விலைகளின் அடிப்படையில் (கடைசி நறுக்கு கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவுத் திகதி வரை ஒன்றுசேர்ந்த வட்டியைத் தவிர்த்து) விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்சத் தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| இலங்கை வங்கி | 2541938 | என்.எஸ்.பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | மக்கள் வங்கி | 2206783 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| எச்.என்.பீ செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 | வெல்த்ரஸ்ற் செக்குரிட்டீஸ் பிஎல்சி | 2675096 |

சந்தை நிலவரங்களைப் பொறுத்து வழங்கப்படும் தொகையை விஞ்சாத எந்தவொரு தொகையையும் ஒவ்வொரு தொடர் தொடர்பாகவும் / ஐஎஸ்ஐஎன், பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம் ஏற்றுக்கொள்ளலாம்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**வழங்கல் அலுவலகம்**
பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
செயலகம், கொழும்பு 1.
தொலைபேசி: +94 112 484 604
இணையதளம்: www.treasury.gov.lk

உதேனி உடுகஹபத்துவ
பணிப்பாளர் நாயகம்
பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்